*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **21 ஜூலை, 2021**

## பத்திரிகை செய்தி

வாராந்திர கோவிட் மேலாண்மை சீராய்வுக் கூட்டம் இன்று (21-07-2021) நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற 21-வது கூட்டத்திற்கு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தலைமை தாங்கினார்.

சுகாதாரத்துறை இயக்குநர், புதுச்சேரியில் கொரோனா நிலவரம், மூன்றாவது அலையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், கரும்பூஞ்சை நோய், தடுப்பூசி, வண்ண சுவர் ஓவியங்களுடன் புதிதாக தயார் செய்யப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரவு ஆகியவை குறித்து படக் காட்சி மூலம் விளக்கினார். மேலும், ஜிப்மர் குழந்தை நல மருத்துவர் குழந்தைகளில் கோவிட் பாதிப்பு குறித்த தகவல்களை படக் காட்சி மூலம் விளக்கினார். குழந்தைகளை பாதிப்பில் இருந்து தடுப்பது, பள்ளி,-கல்லூரிகளை திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தலைமைச் செயலர் அஸ்வனி குமார், காவல் துறை இயக்குனர் திரு R.S. கிருஷ்ணியா, உள்ளாட்சித்துறைச் செயலர் திரு. வல்லவன், செய்தித்துறைச் செயலர் திரு உதய்குமார், சுகாதாரத்துறைச் செயலர் டாக்டர். அருண், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதரி சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் மோகன் குமார், தேசிய சுகாதார இயக்கத் திட்ட இயக்குனர் டாக்டர் ஸ்ரீராமலு, மாநில கோவிட் மேலாண்மை பொறுப்பதிகாரி டாக்டர் ரமேஷ், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால், குழந்தை நலத் தலைமை மருத்துவர் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் அதிகாரிகள்/பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.